# உலக மண் வள தினம்

தூத்துக்குடி ஸ்காட் வேளாண்மை அறிவியல் மையம் மற்றும் வேளாண்மை துறை இணைந்து வாகைகுளத்தில் உலக மண் வள தினம் மற்றும் ராபி முன் பருவ பிரச்சார விழா 05.12.2018 (புதன்கிழமை) கொண்டாடப்பட்டது. வெற்றிகரமான விவசாயத்திற்கு மண்ணே அடிப்படை ஆதாரம். மண்ணின் வளமே விவசாய்களின் வாழ்வாதாரத்தை நிர்னையிக்கும் காரணியாக உள்ளது இதனை கருத்தில் கொண்டு உலக அளவில் மண் வளம் மற்றும் அதன் மேலாண்மையின் நோக்கத்தை உணர்த்தும் வகையில் டிசம்பர் 5ம் தேதி உலக மண் வள தினமாக கொண்டாடபடுகிறது.

இவ்விழாவில் கலந்து கொண்டு பேசிய தூத்துக்குடி வேளாண் இணை இயக்குநர் திருமதி. தமிழ் மலர் அவர்கள் மண் வள பாதுகாப்பு மற்றும் மண் மாசினை குறைப்பதற்கான வழிமுறைகளை வழங்கினார். பின்னர் பேசிய கால்நடைத்துறை மண்டல இணை இயக்குநர் மருத்துவர். பிரேமா அவர்கள் கால்நடை வளர்போர்க்கு உபயோகமான அரசு திட்டங்கள் குறித்து விளக்கினார். இன்றைய மண் வளத்தின் நிலையை விளக்கியும் அதன் மேலாண்மை முறைகள் மற்றும் இயற்கை வேளாண்மையின் முக்கியதுவத்தையும் கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரி உழவியல் துறை இணை பேராசிரியர் முனைவர். ஹேமலதா எடுத்துரைத்தார். அடுத்து பேசிய ஸ்காட் வேளாண்மை அறிவியல் மையத்தின் முதன்மை விஞ்ஞானி மற்றும் தலைவர் மருத்துவர். சீனிவாசன் அவர்கள் கால்நடை வளர்ப்பு முறைகளை விளக்கினார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் மண் பரிசோதனையின் அவசியம் மண் மாதிரி எடுக்கும் முறை மண் பரிசோதனை மூலம் ஏற்படும் நன்மைகள் குறித்து பல்வேறு வேளாண் துறை வல்லுநர்கள் சிறப்புறை ஆற்றினர். இந்நிகழ்ச்சியில் வேளாண் கண்காட்சியும் நடத்தப்பட்டது இதில் மண் வளத்தினை பெருக்குவதற்கு வேளாண் அறிவியல் மையத்தின் மூலம் வழங்கப்படும் உயிர் உரங்கள், மண்புழு உரம், இயற்கை தாவர பூச்சிவிரட்டி, பஞ்சகாவ்யா, இ.எம் என்றழைக்கப்படும் திறன்மிகு நுண்ணுயிர் கரைசல் மற்றும் பல இடு பொருட்களை காட்சிபடுத்தி அதனை உபயோகிக்கும் முறைகளை வேளாண்மை அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர்கள் விளக்கி கூறினர். இதில் கோவில்பட்டி வேளாண் ஆராய்ச்சி நிலையத்தின் நடமாடும் மண் பரிசோதனை நிலையம், ஸ்பிக் அக்ரோ மையம் மற்றும் பெருந்தலைவர் வாழை உழவர் உற்பத்தியாளர் நிறுவன உறுப்பினர்கள் கலந்து கொண்டு அவர்களது தொழில் நுட்பங்களை காட்சிபடுத்தினர். இந்நிகழ்ச்சியினை வேளாண் அறிவியல் மையத்தின் தோட்டக்கலை துறை வல்லுநர் திரு.வேல்முருகன் அவர்கள் தொகுத்து வழங்கினார்

இவ்விழாவில் 100க்கும் மேற்பட்ட விவசாய்கள் கலந்து கொண்டனர். விவசாய்களுக்கு மண் வள அட்டையும் வழங்கப்பட்டது.




**Presidential address by Mrs. Tamil Malar**
**Joint Director of Agriculture, Thoothukudi**




**Felicitation address by Dr. G. Prama**
**Regional Joint Director of Animal Husbandry, Thoothukudi**




**Felicitation address by Dr. M. Hemalatha**
**Associate Professor (Agronomy), AC&RI, Killikulam**




**Sharing of Experience by FPC Director Mr. Saravanan**




**Technical lecture by Mr. Murugan (Agronomy)**
**ICAR SCAD KVK, Thoothukudi**



**Soil Health Card Distribution**




**Farmers Participation view**



**Video on Soil samople collection techniques**




**Mobile Soil Testing Lab**







**Technical Exibition visit by Chief Guests and Farmers**